வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ப.வெ.எண்.5/ஆ4/2024 நாள் 12.04.2024

பொருள் : பள்ளிக்கல்வி – 2023–2024ஆம் கல்வியாண்டு – 1 முதல் 9 ஆம் வகுப்புகளுக்கான பள்ளி இறுதி தேர்வுகள் – கால அட்டவணை வெளியிடுதல் – சார்ந்து

பார்வை : சென்னை, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.19528/எம்/இ1/ 2023 நாள்.20.03.2024

---

அனைத்து அரசு/ அரசு உதவிபெறும்/தனியார் பள்ளிகளில் 1 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான 2023 –2024ஆம் கல்வியாண்டிற்கான பள்ளி இறுதித் தேர்வுகள் 02.04.2024 அன்று தொடங்கி 12.04.2024 வரை நடைபெறும் எனவும் 13.04.2024 முதல் மாணவர்களுக்கு கோடை விடுமுறை எனவும் தெரிவிக்கப்படுகிறது.மேலும் ஆசிரியர்கள் 19.04.2024 அன்று நடைபெற உள்ள 18வது மக்களவைத் தேர்தல் சார்ந்த பயிற்சிகள் உள்ளிட்ட அனைத்து தேர்தல் பணிகளையும் மேற்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

மேலும் 23.04.2024 முதல் 26.04.2024 வரையில் 1 முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான விடைத்தாள் திருத்துதல், தேர்வு முடிவுகள் வெளியிடுதல் மற்றும் அடுத்த கல்வி ஆண்டிற்கான (2024 –2025) மாணவர்கள் சேர்க்கை போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் 26.04.2024 அன்று இக்கல்வி ஆண்டிற்கான கடைசி வேலை நாளாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் கோடை விடுமுறை முடிந்து பள்ளி திறக்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும் என அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
தலைமை ஆசிரியர்கள்/முதல்வர்கள்,
அரசு/ அரசு உதவிபெறும்/தனியார் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்.
மாவட்டக்கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை, தொடக்கக் கல்வி, தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம்.